**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 13.10.2025**
**OS. No. 09/2021**
**வழக்கு சாட்சி PW.1– வசந்தி, க/பெ.மகேந்திரன்**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து 1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

19) வா.சா.ஆ.7 சட்ட அறிவிப்பானது நான் 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு அனுப்பவில்லை என்றால் சரியல்ல, அனுப்பியுள்ளேன். வா.சா.ஆ.7 சட்ட அறிவிப்பானது 8ம் பிரதிவாதிக்கு மட்டும் தான் அனுப்பப்பட்டுள்ளது என்றும், நான் தற்போது தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து பூர்வீக சொத்து என்பதை வா.சா.ஆ.7 சட்ட அறிவிப்பில் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து பூர்வீக சொத்து தான் என்பதற்கு ஆதரவாக ஆவணங்கள் எதையேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் என் வசம் எந்த ஆவணமும் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள பட்டாக்கள் அனைத்தும் 1ம் பிரதிவாதி மாதையன் மற்றும் 2ம் பிரதிவாதி பாப்பாத்தி ஆகியோர் பெயரில் தான் உள்ளது என்றால் சரிதான்.

20) சார்பதிவாளர் அலுவலகத்திலிருந்து தாவா சொத்து சம்மந்தமாக வில்லங்க சான்று எதையேனும் பெற்று நீதிமன்றத்த்தில் தாக்கல் செய்துள்ளேனா எ ன்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் அவ்வாறு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றும், தற்போது தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் வில்லங்க சான்றிதழ் தாக்கல் செய்திருந்தால் 1, 2 பிரதிவாதிகள் தாவா சொத்தை 1996 மற்றும் 2003ல் சுயமாக கிரையம் பெற்ற விவரம் நீதிமன்றத்திற்கு தெரிந்துவிடும் என்பதால் தான் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

21) தாவா சொத்துக்களை 3 பாகங்களாக பிரித்து வழங்க வேண்டும் என்று வழக்கில் கேட்டுள்ளேன். 3 பாகங்களாக பிரிப்பதற்கான கணக்கீடுகள் நான் வழக்கில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. வழக்கில் வம்சாவளி பட்டிலை நான்

நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி குடிசை வீட்டில் இருந்து கொண்டு, அரசின் உதவியுடன் தார்சு வீடு கட்ட முயன்றார் என்றும், அதை தடுப்பதற்காக இந்த பொய்யான வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றும், 1, 2 பிரதிவாதிகள் சுயமாக சம்பாதித்த சொத்தை அவர்கள் யாருக்கு வேண்டுமானாலும் வழங்கலாம் என்றும், அதில் நாங்கள் எந்த உரிமையும் கோர இயலாது என்றால் சரியல்ல, என் குழந்தைகளுக்காகத்தான் கேட்கிறேன். 1ம் பிரதிவாதிக்கு சிறுநீரக கோளாறு ஏற்பட்டு, தற்போது வரை தொடர் சிகிச்சையில் இருந்து வருகிறார் என்றும், அவருக்கு உதவி செய்வதை விட்டு, உபத்தரம் செய்யும் நோக்கத்துடன் பொய் வழக்காடுகிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகளை மன உலைச்சல் செய்யவேண்டும் என்று இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு ஆதரவாக செலவுத்தொகையுடன் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

ஒம்/-திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.